பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
16 10 2024 6 45
புதன்கிழமை காலை

தலைப்புச் செய்திகள் -

- வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள காற்றழுத்த தாழ்வு மண்டலம் புதுச்சேரி – நெல்லூர் இடையே நாளை காலை கரையை கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர் மாவட்டங்களில் இன்று கனமழை முதல் அதிகன மழை பெய்யக்கூடும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
- மழை காரணமான விடுமுறையின்போது மாணவர்களுக்கு ஆன்லைன் வகுப்புகள் நடத்துவதை தனியார் பள்ளிகள் தவிர்க்க வேண்டுமென்று மாநில அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கேட்டுக் கொண்டுள்ளார்.
- நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளில் 95 கோடி பயனாளிகளுக்கு இணைய வசதி ஏற்படுத்தப்பட்டள்ளதாக மதிய அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.
- டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

*---- இனி விரிவான செய்திகள் ---*

[]<<<>>>[]

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதி தாழ்வு மண்டலமாக வலுப்பெற்று சென்னைக்கு தென்கிழக்கே 440 கிலோமீட்டர் தொலைவில் மையம் கொண்டுள்ளது.

இது மேற்கு வடமேற்கே நகர்ந்து நாளை காலை புதுச்சேரி – நெல்லூர் இடையே கரையை கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக சென்னை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம, திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் இன்று மிக கன முதல் அதிகனமழை பெய்யக்கூடும் என்று அது கூறியுள்ளது.

ராணிப்பேட்டை, திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, பெரம்பலூர், அரியலூர், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், தஞ்சாவூர், திருவாரூர், கடலூர், விழுப்புரம் மற்றும் வேலூர் மாவட்டங்களில் கன முதல் மிக கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாகவும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

திருப்பத்தூர், கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், திருச்சி மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் சில பகுதிகளில் இன்று கன மழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

இதனிடையே சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய மாவட்டங்களில் தொடர்ந்து மழை பெய்து வருகிறது.

தாழ்வான பகுதிகளில் வெள்ளநீர் சூழ்ந்துள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்பு மற்றும் நிவாரணப் பணிகள் முழுவீச்சில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தாழ்வான பகுதிகளில் தேங்கியுள்ள தண்ணீரை உடனுக்குடன் அகற்றும் பணிகளும் நடைபெற்று வருகின்றன.

இந்நிலையில் சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் கள நடவடிக்கைகள் மற்றும் மீட்புப் பணிகள் குறித்து மண்டல கண்காணிப்பு அலுவலர்களுடன் மாநில துணை முதலமைச்சர் திரு உதயநிதி ஸ்டாலின் மாநகராட்சி அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டார்.

பாதிக்கப்பட்ட பகுதிகளில் நிவாரணப் பணிகளை விரைந்து மேற்கொள்ளுமாறு அவர் அறிவுறுத்தினார்.

தாழ்வான பகுதிகளில் வசிக்கும் மக்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைப்பதற்காக சென்னை மற்றும் அதனை சுற்றியுள்ள மாவட்டங்களில் நிவாரண மையங்கள் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளதாக மாநில அரசு தெரிவித்துள்ளது.

மாநிலம் முழுவதும் பேரிடர் மீட்புக்குழுக்களும், படகுகளும் தயார் நிலையில் உள்ளதாகவும் அரசு கூறியுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில் மழை வெள்ள பாதிப்புகள் குறித்து நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு கே என் நேரு நேற்று ஆய்வு செய்தார்.

ஆவடியில் மழைநீர் தேங்காதவாறு நடவடிக்கை எடுக்கப்படும் என்று அப்போது அவர் தெரிவித்தார்.

செங்கல்பட்டு, திருவள்ளூர் மாவட்டங்களில் மழை வெள்ள பாதிப்புகளை உடனடியாக சீர் செய்வதற்கான நடவடிக்கைகள் முழுவீச்சில மேற்கொள்ளப்பட்டு வருவதாக எமது செய்தியாளர்கள் தெரிவிக்கின்றன.

*( வாய்ஸ்பைட் - சுரேகா / தனசேகர் ) ---95 செசண்ட்*

கனமழை எச்சரிக்கையை அடுத்து, சென்னை, செங்கல்பட்டு, திருவள்ளூர், காஞ்சிபுரம் ஆகிய நான்கு மாவட்டங்களில் அத்தியாவசிய சேவைகள் தவிர இதர அலுவலகங்களுக்கு இன்று பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி, விழுப்புரம், சேலம், தருமபுரி, கள்ளக்குறிச்சி, திருவண்ணாமலை ஆகிய மாவட்டங்களில் பள்ளிகளுக்கு மட்டும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

ராணிப்பேட்டை மாவட்டத்தில் பள்ளி கல்லூரிகளுக்கு விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னையிலிருந்து இன்று புறப்பட வேண்டிய பல்வேறு ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது.

சென்னை சென்ட்ரல் - போடிநாயக்கனூர், ஜோலார்பேட்டை ஏலகிரி எக்ஸ்பிரஸ், திருப்பதி எக்ஸ்பிரஸ், திருப்பதி சப்தகிரி எக்ஸ்பிரஸ், ஏற்காடு அதிவிரைவு ரயில், பெங்களூரு, மைசூரு, கோயம்புத்தூர் இன்டர்சிட்டி, கோயம்புத்தூர் சதாப்தி உள்ளிட்ட ரயில்கள் இன்று இரு மார்க்கங்களிலும் ரத்து செய்யப்பட்டள்ளன.

மேட்டுப்பாளையம் - உதகை மலை ரயில் இன்றும் நாளையும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

தொடர் மழை காரணமாக கிருஷ்ணகிரி அணை நிரம்பும் நிலையில் உள்ளதால் கிருஷ்ணகிரி, தருமபுரி, திருவண்ணாமலை மாவட்டங்களில் கரையோரப் பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

**[]<<<>>>[]**

தமிழகத்தில் மழை பாதிப்பை எதிர்கொள்ளும் வகையில் மாநில அரசு தேவையான ஏற்பாடுகளை செய்து வருவதாக தமிழக ஆளுநர் திரு ஆர் என் ரவி கூறியுள்ளார்.

சேலத்தில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மழையை எதிர்கொள்வதற்கான அனைத்து வழிமுறைகளையும் அரசு மேற்கொண்டு வருவதாக தெரிவித்தார்.

மழை பாதிப்புகளை மாநில அரசு உரிய முறையில் கையாளும் என்று தாம் நம்புவதாகவும் திரு ஆர் என் ரவி குறிப்பிட்டார்.

[]<<<>>>[]

கனமழை எச்சரிக்கையை அடுத்து விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ள மாவட்டங்களில் மாணவர்களுக்கு ஆன்லைன் வகுப்புகள் நடத்துவதை தனியார் பள்ளிகள் தவிர்க்க வேண்டுமென்று மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு அன்பில் மகேஷ் பொய்யாமொழி கேட்டுக் கொண்டுள்ளார்.

நாகை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் பருவமழை முன்னெச்சரிக்கை ஏற்பாடுகள் குறித்து நேற்று ஆய்வு செய்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், வானிலையை பொறுத்து பள்ளிகளுக்கான விடுமுறை தொடர்பாக அந்தந்த மாவட்ட ஆட்சியர்கள் முடிவுெ சய்வார்கள் என்று தெரிவித்தார்.

*( சவுண்ட்பைட் - அன்பில் மகேஷ் ) -55---- செகண்ட்*

[]<<<>>>[]

நாட்டில் கடந்த பத்து ஆண்டுகளில் மொபைல்களின் எண்ணிக்கை ஒன்று புள்ளி ஒன்று ஆறு பில்லியனாக அதிகரித்துள்ளது என்று மத்திய தொலைத் தொடர்புத்துறை அமைச்சர் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், 95 கோடி பயனாளிகளுக்கு இணைய வசதி ஏற்படுத்தப்பட்டள்ளதாகக் கூறினார்.

ஆறு-ஜி அலைக்கற்றைக்கான தர நிலையை முடிவு செய்வற்கான பணிகளில் மத்திய அரசு ஈடுபட்டு வருவதாக அவர் குறிப்பிட்டார்.

செயற்கை நுண்ணறிவு, தரவு மையங்கள் உள்ளிட்டவற்றில் வருங்காலங்களில் இந்தியா முக்கிய பங்கு வகிக்கும் என்றும் திரு ஜோதிர் ஆதித்ய சிந்தியா தெரிவித்தார்.

[]<<<>>>[]

லெபனான் மீதான தாக்குதலை இஸ்ரேல் உடனடியாக நிறுத்த வேண்டுமென்று ஐ நா வலியுறுத்தியுள்ளது,

[]<<<>>>[]

மியான்மரில் எண்ணெய் கிடங்கில் ஏற்பட்ட தீ விபத்தில் எட்டு பேர் உயிரிழந்தனர்.

[]<<<>>>[]

மத்திய நிதி அமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் மெக்ஸிகோ மற்றும் அமெரிக்காவுக்கு இன்று பயணம் மேற்கொள்கிறார்.

[]<<<>>>[]

குடியரசு துணைத்தலைவர் திரு ஜக்தீப் தன்கர் அஸ்ஸாம், மேகாலயா மாநிலங்களில் இரண்டு நாள் பயணம் மேற்கொள்கிறார்.

[]<<<>>>[]

நாட்டில் 234 இடங்களில் 730 தனியார் பண்பலை வானொலி அலைவரிசைகளை அமைப்பதற்கான மின்னணு ஏலத்திற்கான அறிவிக்கையை மத்தி.ய அரசு வெளியிட்டுள்ளது.

[]<<<>>>[]

ஜம்மு-கஷ்மீர் யூனியன் பிரதேச முதலமைச்சராக ஜம்மு-கஷ்மீர் தேசிய மாநாட்டுக் கட்சியின் தலைவர் திரு உமர் அப்துல்லா இன்று பதவியேற்கிறார்.

[]<<<>>>[]

தேனி மாவட்டம் சோத்துப்பாறை நீர்த்தேக்கத்திலிருந்து பாசனத்திற்காக நாளை முதல் தண்ணீர் திறந்துவிடப்படும் என்று மாநில நீர்வளத்துஐற தெரிவித்துள்ளது.

[]<<<>>>[]

திருப்பத்தூர் மாவட்ட காவல்துறை சார்பில் கல்லூரி மாணவர்களுக்கு போதைப் பொருட்களின் தீமை, போக்குவரத்து விதி முறைகள் குறித்த விழிப்புணர்வு நிகழ்ச்சி நேற்று நடைபெற்றது.

[]<<<>>>[]

நெல்லை, தென்காசி, கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள கல்லூரிகளில் போதைப்பொருள் புழக்கத்தை தடுக்க மூன்று கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளதாக நெல்லை சரக டி ஐ ஜி மூர்த்தி தெரிவித்துள்ளார்.

[]<<<>>>[]

டென்மார்க் ஓபன் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் பி வி சிந்து காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர் 21-8, 13-7 என்ற செட் கணக்கில் சீன தைபே-யின் **Pai yu po**-வை வென்றார்.

இப்போட்டியில் சின தைபே வீராங்கனை ஆட்டத்தின் இரண்டமாவது சுற்றில் ஆடிக் கொண்டிருந்தபோது போட்டியிலிருந்து விலகுவதாக அறிவித்தார்.

**[]<<<>>>[]**

இந்தியா – நியூசிலாந்து அணிகளுக்கு இடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பெங்களூருவில் இன்று தொடங்குகிறது.

இரு அணிகளுக்கும் இடையே மூன்று போட்டிகளைக் கொண்ட இந்த தொடரில் இரண்டாவது போட்டி இம்மாதம் 24-ஆம் தேதி புனேயிலும், மூன்றாவது மற்றும் இறுதி டெஸ்ட் போட்டி அடுத்த மாதம் ஒன்றாம் தேதி மும்பையிலும் நடைபெறுகிறது.

**[]<<<>>>[]**